DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRAT COURT NO. II, VILLUPURAM

| CC.286/2022 | | | |
|---|---|---|---|
| Prosecution Witness: 4 | | | |
| Name | ஜோசப் ரவி | Caste | |
| Father's Name/ Husband Name | அந்தோணிசாமி | Religion | |
| Village | விழுப்புரம் | Age | 56 |
| Taluk | | | |
| A3 present. A1, A2, A4 absent. 317 Cr.P.C PFA. | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.10.2023

**முதல் விசாரணை**

(அ) நான் தற்போது கண்டமங்கலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கண்டமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய செல்வகுமார் மற்றும் உதவி ஆய்வாளராக பணியாற்றிய அண்ணாதுரை ஆகியோர்களின் கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு தெரியும் என்பதால் அவர்கள் தயாரித்து வைத்த கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 20.11.2020ம் தேதி 16 மணியளவில் சிறப்பு உதவி அய்வாளர் செல்வகுமார் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் நிலைய பொருப்பில் இருந்தபோது வழுதாவூரை சேர்ந்த விஜி மகன் ஐய்யப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 1391/2020 பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதசபடி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசாஆ.2** ஆகும்.

(ஆ) மேற்படி வழக்கை உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்ததை உதவி ஆய்வாளர் அண்ணாதுரை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே 17 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஜய் மற்றும் பரந்தாமன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் **அதசாஆ.3 மற்றும் 4** ஆகும். பின்பு சாட்சிகள் ஐய்யப்பன், விஜி, அன்பழகி, சுப்புராயன், அஞ்சாபுலி, அருண்குமார், சவிதா, இல்லாமல்லி, விஜய், பத்மநாபன் ஆகியோர்களை தனித்தனியே

விசாரணை செய்து வாக்கமூலம் பதிவு செய்துள்ளார்.

(இ) அவரது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடிச்சென்றதில் எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் மூலம் முன்பிணையில் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த சம்பவத்தில் காயம் அடைந்த விஜி மற்றும் அன்பழகி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சதிஷ்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு அறிக்கைகள் பெற்றுள்ளார். அந்த விபத்து பதிவேடு அறிக்கைகள் **அதசாஆ.5 மற்றும் 6** ஆகும்.

(ஈ) அதில் மருத்துவர் அவர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்து தெரிவித்துள்ளார். மேற்படி அதசாஆ.5 மற்றும் 6 ஆவணங்கள் அரசு தரப்பில் 294(3) குவிமுச படி மனுதாக்கல் செய்து எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையின்றி குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மருத்துவரின் கருத்தின் அடிப்படையில் வழக்கின் சட்டபிரிவுகளை 294(பி), 325, 326, 352, 506(2) இதசபடி பிரிவு மாற்றம் செய்து அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த பிரிவு மாற்றம் அறிக்கை **அதசாஆ.7** ஆகும். உதவி ஆய்வாளர் இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். உதவி ஆய்வாளர் விசாரைணயில் அசா1 சம்பவத்தை குறித்தும், புகார் அளித்ததுபற்றியும் தெரிவித்துள்ளார். உதவி ஆய்வாளர் விசாரணையில் அசா2 மற்றும் 3 ஆகியோர்கள் சம்பவத்தை குறித்தும் தங்களுக்கு ஏற்பட்ட காயத்தை குறித்தும் தெரிவித்துள்ளார்கள்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.
(Sd/-V.Akila)
Judicial Magistrate No.II, Villupuram